




admin@dhinakani.com RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 49 | 4 Pages | 18.9.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 49 | 4 பக்கங்கள் | 18.9.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**கல்லாதான் ஒட்பங் கழியநன் றாயினுங்**
**கொள்ளார் அறிவுடை யார்**

**விளக்கம்:**
**கல்லாதவனுடைய அறிவுடைய ஒருக்கால் மிக நன்றாக இருந்தாலும் அறிவுடையோர் அதனை அறிவின் பகுதியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

# சொத்து வரி பல மடங்கு உயர்வினால் அதிருப்தியில் இருக்கும் ஈரோடு மக்கள்

ஈரோடு மாநகராட்சியில் வாரம் தோறும் திங்கள் கிழமை மதியம் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. கடந்த திங்கட்கிழமை நடந்த இந்த கூட்டத்தில் பொது மக்கள் சார்பாக சுமார் 30 மனுக்கள் தரப்பட்டது இவற்றில் பெரும்பாலும் சொத்து வரி உயர்வை குறைக்க கோரி பொதுமக்கள் மனு கொடுத்தனர்.

ஒவ்வொரு வாரமும் நடக்கும் குறைதீர்க்கும் கூட்டத்தில் சொத்து வரியை குறைக்க வேண்டும் என்று தான் அதிகமான மனுக்களை பொது மக்கள் கொடுத்து வருகிறார்கள்.

ஆனால் மாநகராட்சி அதிகாரிகள் ஏனோ பொது மக்களின் மனுக்களை பரிசீலனை செய்வது இல்லை என்றும் இது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு செல்கிறார்களா என்பது தெரியவில்லை என்றும் பொது மக்கள் புகார் கூறுகின்றனர். ஈரோடு திமுகவினர், அதிமுகவினர், பாரதிய ஜனதா கட்சியினர், தமிழக வெற்றி கழகத்தினர், பொதுமக்கள் உள்பட பலரும் தீர்மானங்கள், போராட்டங்கள், மனுக்கள் என பல்வேறு வகையில் முயற்சித்தும் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர், அரசு அலுவலர்கள் மெத்தனமாக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது திமுக அரசின் மீது ஈரோடு பொதுமக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. இதன் காரணமாக அரசு அதிகாரிகள் மீது முதலமைச்சர் மு க ஸ்டாலின் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என விரும்புகின்றனர்.

மேலும் மற்ற மாவட்டங்களை விட அதிகமாக உள்ள சொத்துவரியை முதலமைச்சர் குறைக்க வேண்டும் என்று கோரி மனு கொடுத்தனர்.

# கூவத்தூரில் நடந்தது என்ன? எடப்பாடி முதல்வரானது எப்படி? சீக்ரெட்டை உடைத்த டிடிவி தினகரன்



சென்னை:

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை மிகக் கடுமையாக விமர்சித்து பேசியிருக்கிறார் டிடிவி தினகரன். எடப்பாடி பழனிசாமிக்கு பொய்களைத் தவிர வேறு எதுவும் தெரியாது எனக் குறிப்பிட்ட அவர், கூவத்தூரில் என்ன நடந்தது..

எடப்பாடி பழனிசாமி ஆட்சி எப்படிக் காப்பாற்றப்பட்டது என்பது குறித்து சில தகவல்களைப் பகிர்ந்துள்ளார்.

அதிமுகவில் கடந்த சில ஆண்டுகளாக அமைதி நிலவி வந்த சூழலில், அங்கு இப்போது மீண்டும் உட்கட்சி குழப்பம் வெடித்துள்ளது.

கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்களை மீண்டும் இணைக்க வேண்டும் எனச் சொல்லி செங்கோட்டையன், அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இன்னொரு பக்கம் டிடிவி தினகரன் தொடர்ச்சியாக எடப்பாடியை விமர்சித்து வருகிறார்.

இதற்கிடையே செய்தியாளர்களிடம் பேசிய டிடிவி தினகரன், கூவத்தூரில் நடந்த சில விஷயங்கள் குறித்து முக்கிய தகவல்களைப் பகிர்ந்துள்ளார்.

இது தொடர்பாகச் செய்தியாளர்களிடம் பேசிய டிடிவி தினகரன், “சாத்தான் வேதம் ஓதுவது போல நன்றியைப் பற்றிய எடப்பாடி பழனிசாமி பேசுகிறார்.

மற்ற கட்சியைச் சேர்ந்தவர்களும் தமிழக மக்களும் முட்டாள் என நினைத்து எடப்பாடி பழனிசாமி பேசி வருகிறார். துரோகத்தைத் தவிர வேறு எதுவும் தெரியாத பழனிசாமி, நன்றியைப் பற்றிப் பேசுகிறார்.

ஜெயலலிதா ஆட்சியைக் கலைக்க முற்பட்ட போது பாஜக காப்பாற்றியதாக எடப்பாடி பேசுகிறார். அதுவே தவறு! ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு ஓபிஎஸ் முதல்வராக இருந்தார்.

அவருக்குப் பதிலாக சசிகலாவை முதல்வராக்க எம்எல்ஏக்கள் அனைவரும் முடிவு செய்து, கவர்னரிடம் மனு கொடுத்தார்கள்.

அப்போது திமுக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த போது, இவரைக் காப்பாற்றியது பாஜக இல்லை.

அதிமுக எம்எல்ஏக்கள் தான்.

கூவத்தூரில் எம்எல்ஏக்கள் தங்க வைக்கப்பட்டு வாக்களித்து தான் எடப்பாடி முதல்வராகக் காரணம்.

அப்போது கூட நான்தான் முதல்வர் எனச் சொன்னால் எம்எல்ஏக்கள் பலரும் ஆதரவு கடிதத்தில் கையெழுத்து போட மாட்டார்கள்..

கையெழுத்துகளை வாங்கிய பிறகு அதைச் சொல்லுங்கள் எனச் சொன்னவர் எடப்பாடி பழனிசாமி.

அதன் பிறகு சசிகலா சிறைக்குச் சென்றபோது, 122 எம்எல்ஏக்களில் எத்தனை பேர் வெளியேற இருந்தார்கள்.

அவர்களைத்தடுத்துநிறுத்தியது யார் என்பது அவருக்கே தெரியும். எடப்பாடியை எல்லாம் முதல்வராஏற்க முடியாது எனச்சொல்லி பலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

செம்மலை எல்லாம் சுவர் எகிறிக் குதித்து ஓடினார்.

அவர்களை எல்லாம் பாதுகாத்து வைத்து, அவர்கள் வாக்களித்தாலேயே எடப்பாடியால் முதல்வராக முடிந்தது.

ஆனால், அந்த நன்றியை எல்லாம் மறந்தவர் தான் எடப்பாடி பழனிசாமி” என்றார்.

# விஜய் வர்றதுக்கு முன்னாடியே திருச்சியில் ஸ்டார் ஓட்டல்களுக்கு போன உத்தரவு?

சென்னை: தவெக தலைவர் விஜய் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பிரச்சாரம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார். அந்த வகையில் வரும் 20ம் தேதி நாகை, திருவாரூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களிலும், 27ம் தேதி திருவள்ளூர், வட சென்னை பகுதிகளிலும், அக்டோபர் 4, 5 தேதிகளில் கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். ஆனால், இனி நடக்க போகும் விஜய்யின் கூட்டங்களுக்கு அனுமதி கிடைக்குமா? என்பது சந்தேகம் தான் என்று பத்திரிகையாளர் மணி கூறுகிறார்.

Arasiyal Kalam என்ற யூடியூப் சேனலுக்கு பேட்டி தந்துள்ள மூத்த பத்திரிகையாளர் மணி, “விஜய்யின் அரசியல் வருகையானது, ஒட்டுமொத்த அரசியல் எந்திரமும் கதிகலங்கி போயிருக்கிறது.. இளையராஜாவுக்கு நடந்த பாராட்டு விழாவானது, அன்றைய தினம் இரவு 8 மணியுடன் முடிப்பதாக திட்டம். ஆனால், 9,.30 மணிவரை இழுத்தடிக்கப்பட்டது.. இதற்கான காரணம் என்னவென்பது, அதிகாரிகளுக்கும், மீடியாவில் உள்ளவர்களுக்கும் தெரியும்.. விஜய் அன்று அரியலூரில் பிரச்சாரத்தை துவங்கவில்லை.. இரவு விஜய் பேசி முடித்தபிறகுதான், முதல்வர் இங்கே தன்னுடைய பேச்சை துவங்குகிறார்.. அரசுதீர்மானித்திருந்த நேரத்தையும் மாற்றுகிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? விஜய் பேச்சுக்கு மீடியா முக்கியத்துவம் தந்துவிடும் என்ற பதைபதைப்பில் இதெல்லாம் நடக்கிறது. எத்தனை நாளைக்கு இந்த பூச்சு வேலை நடக்கும்?

விஜய் மாதிரி ஒரு கேரக்டர் எப்படி தமிழக அரசியலில் உதிக்க முடிகிறது? இவர்கள் நியாயமாக இருந்திருந்தால், மக்கள் தந்த தீர்ப்பை மதித்து, நேர்மையான முறையில் அரசு செயல்பட்டிருந்தால், விஜய் ஏன் வரப்போகிறார்? அப்படியே வந்திருந்தாலும், அதில் பலனும் இருந்திருக்காது.. எனவே கோளாறு இவர்களிடம்தான் உள்ளது.. இதை புரிந்துகொள்ளாதவரை, விடிவுகாலமும் வராது..

விஜய்யை தொடர்ச்சியாக இழிவுபடுத்துவதிலும், மக்களின் கவனத்தை திசை திருப்புவதிலும்தான் இனி அரசின் கவனம் இருக்கும்.. அதேபோல கண்ணுக்கெட்டி தூரம்வரை எதிர்க்கட்சியே காணவில்லை.. எப்போதுமே ஒருவருக்கு வியாதி வந்துவிட்டால்,



அந்த வியாதியைதான் குணப்படத்த வேண்டுமே தவிர, வியாதிக்கான அறிகுறிகளில் கவனம் செலுத்தி கொண்டிருக்கிறது.. அதேபோல 76 ஆண்டு கால வரலாற்றில், பல இடர்பாடுகளை, போராட்டங்களை சந்தித்துதான் திமுக வளர்ந்துள்ளது.. எனவே, சிறந்த எதிர்க்கட்சியாக எப்படி செவேண்டும் என்பதை திமுகவிடமிருந்து விஜய் கற்றுக் கொள்ள வேண்டும்.. 50 வருட காலம் எதிர்க்கட்சியாக இருந்துள்ளதால், திமுகவிடமிருந்து விஜய் கற்றுக் கொள்ள வேண்டும்.. ஆனால், விஜய் மீது நிறைய தாக்குதல்களை திமுக தொடுக்கும்.. விஜய்யின் அடுத்தடுத்த கூட்டங்களுக்கு அனுமதி கிடைக்குமா? என்பது சந்தேகம்தான்,. திருச்சிக்கு பிறகு மயிலாடுதுறையில் கூட்டம் நடத்த போகிறார் விஜய்.. எனவே மாவட்ட நிர்வாகமே அதற்கு அனுமதி மறுக்கும் அல்லது வேறு யாராவது விஜய் கூட்டத்தை எதிர்த்து கோர்ட்டுக்கு போகலாம்.. அதுமட்டுமல்ல, விஜய்யின் திருச்சி கூட்டத்தின்போதே, ஏர்போர்ட் போக முடியாமல், அலுவலகம் போக முடியாமல் பொது மக்கள் நிறைய சிரமத்தை எதிர்கொண்டனர்.. எனவே விஜய்க்கு கூட்டம் கூடுவதும் சிக்கல்தான்.. இதனை விஜய் எப்படி எதிர்கொள்ள போகிறார் தெரியவில்லை. காரணம், திருச்சி கூட்டத்திற்கு முன்தினம் இரவே, விஜய் திருச்சியில் சென்று தங்குவதாக இருந்தது.. ஆனால், எந்த நட்சத்திர ஓட்டல்களிலும் விஜய் தங்கிவிடக்கூடாது என்று கெடுபிடிகள் செய்யப்பட்டுள்ளன.. விஜய் தங்கினால் கட்சிக்காரர்கள் ஓட்டலையே அலம்பல் செய்துவிடுவார்கள், எனவே விஜய்க்கு ஸ்டார் ஓட்டலில் யாரும் ரூம் தரக்கூடாது என்று ஓட்டல் அதிபர்களுக்கு அழுத்தங்கள் தரப்பட்டதாகதரப்பட்டுள்ளது.. எனவே முதல் இரவே விஜய் தங்க வேண்டியது முடியாமல் போய்விட்டது.. சரியான ஓட்டல் கிடைக்காததால், மறுநாள் காலையில் ஸ்பெஷல் ஃபிளைட்டில் சென்றிருக்கிறார்.. அதனால்தான், ஏர்போர்ட்டிலிருந்து அவரால் 6 கிமீ தூரத்துக்கு எளிதாக வர முடியவில்லை.. வழக்கமாக ஏர்போர்ட்டிலிருந்து 6 கிமீ தூரம் வருவதற்கு அதிகபட்சம் அரை மணி நேரம் ஆகும்.. ஆனால், விஜய்க்கு 5 மணி நேரமாகியிருக்கிறது..முதல்நாளே எந்த கெடுபிடியும் செய்யாமல், விஜய்யை திருச்சி ஓட்டல்களில் எங்காவது தங்க விட்டிருந்தால், இந்த கூட்டம் சேர்ந்திருக்காது.. எனவே அரசுதான் தன்னுடைய தலையில் சூனியம் வைத்து கொண்டது.. இப்போது அடுத்தடுத்த மாவட்டங்களுக்கு விஜய் செல்லும்போதெல்லாம் கூட்ட நெரிசலால் சிக்கல் வரும்.. எனவே விஜய் கூட்டத்துக்கு அனுமதி தரக்கூடாது என்று கோரி யாராவது நிச்சயம் நீதிமன்றம் செல்வார்கள்” என்றெல்லாம் தெரிவித்துள்ளார்.



மான்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்களுடன் டாஸ்மாக் AITUC சந்திப்பு..... 16092025 இந்திய கம்யூனிஸ்டு கட்சி செயலாளராக தேர்வு செய்யப்பட்ட தோழர் மு. வீரபாண்டியன் அவர்கள் தோழர் இரா.முத்தரசன் அவர்களுடன் தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் AITUC மாநில தலைவர் தோழர் நா.பெரியசாமி, பொதுச்செயலாளர் தோழர் த.தனசேகரன் ஆகியோர் மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்று உழைக்கும் மக்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும், டாஸ்மாக் பணியாளர்களின் 22 ஆண்டுகளாக தொடர்ந்து வரும் தற்காலிக பணியை பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்றிட தாங்கள் தலையீடு செய்ய வேண்டும் என்று பேசிய போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தனது தனி உதவியாளர் அவர்களை அழைத்து குறிப்பு எடுத்து கொள்ள கூறி பரிசீலனை செய்வதாக கூறினார்கள்

# அண்ணா பிறந்தநாள் மின்னாம்பபள்ளியில் கொண்டாடப்பட்டது

சேலம் செப்டம்பர்.

அறிஞர் அண்ணாவின் 117 வது பிறந்த நாளில் சேலம் கிழக்கு மாவட்டம், அயோத்திய பட்டணம் வடக்கு ஒன்றியம், மின்னாம்பள்ளி ஊராட்சியில் அனைத்து பூத் பாகத்திலும் பிறந்த நாள் கொண்டாடி இனிப்பு வழங்கி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆணைப்படி தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், என்ற உறுதிமொழியும் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்த குடும்பத்தினர் சேர்ந்து உறுதிமொழி எடுக்கப் பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு ஆர். இலட்சுமண பெருமாள் தலைமையில் மாவட்ட விளையாட்டு அணியை துணை அமைப்பாளர் கே. சுந்தரமூர்த்தி அவை தலைவர் எஸ்.பி. ஆறுமுகம் முன்னாள் கவுன்சிலர் ஒன்றிய கழகத் துணைச் செயலாளர் முன்னிலையில் எம். ஆவரணம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் இராஜேந்திரன், கிளைக் கழகச் செயலாளர்கள் முத்துக்குமார், கலையரசி, ஆறுமுகம், ஏடிசி சுரேஷ்குமார், நாராயணசாமி, மோனிகா, சலூன் பழனிசாமி, பி எல்ஏ 2 ராமச்சந்திரன், வினோத்குமார், பிடிஏ தியாகராஜன், சின்னதுரை, மணி, கௌதமன், மேலும் மகளிர் அணி பிரியா, கார்த்திக் சுமதி, சின்னசாமி, ஐடி பிரிவு சூரி மற்றும் கழக உடன்பிறப்புகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



பிரதமர் நரேந்திர மோடியின் 75வது பிறந்தநாளையொட்டி, பழநியில் வீடற்றோர் தங்கும் விடுதியில் அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகளை, பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் மாவட்ட தலைவர் கனகராஜ் வழங்கினார்.






திருப்பூர் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 147 வது பிறந்த நாளை முன்னிட்டு, மக்கள் ஜனநாயக முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர்&அஹிம்சை தலைவர் இப்ராஹிம் பாதுஷா அவர்களின் ஆணைக்கு இணங்க, வழிகாட்டுதலோடு, திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் (S.அபுதாஹீர்.mjmk) அவரது தலைமையில்,இன்றைய தினம் திருப்பூர் ரயில் நிலையம் அருகில் உள்ள தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு முழக்கம் எழுப்பப்பட்டு உறுதிமொழி எடுத்துக் கொண்டோம்.... இந்த நிகழ்வில் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் உயர்திரு ரஹீம் மாநகர் மாவட்ட தலைவர் உயர்திரு செல்லக்குமார்,வடக்கு மாவட்ட தலைவர் உயர்திரு காளிதாஸ், தெற்கு மாவட்ட தலைவர் உயர்திரு முகமது இத்ரீஸ், தெற்கு மாவட்ட துணைத் தலைவர் உயர்திரு அலாவுதீன், தெற்கு மாவட்டம் செயலாளர் இப்ராஹிம் கான், பழவஞ்சிபாளையம் கிளை தலைவர் உயர்திரு அமீர், மங்கலம் ஒன்றிய செயலாளர் உயர்திரு தமீம் அன்சாரி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்...



திண்டுக்கல்,அரசுமருத்துவக்கல்லூரிமருத்துவமனையில்நோயாளிகளுடன்மருத்துவமனைக்குவருபவர்களுக்கு ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியே காத்திருப்பு அறையை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்நிகழ்வில் பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார், மாநகராட்சி மேயர் இளமதி, துணை மேயர். ராஜப்பா, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர், மருத்துவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



திண்டுக்கல் ரயில் நிலையத்தில் 5 கிலோ கஞ்சா மற்றும் 20 கிலோ குட்கா பறிமுதல் திண்டுக்கல்லில் ஹவுரா (மேற்கு வங்கத்தில்) இருந்து கன்னியாகுமரி வரை செல்லும் அதிவிரைவு வண்டியில் முன்பதிவு இல்லாத பெட்டியில் கேட்பாரற்று பேக் ஒன்று கிடந்தது இந்த பேக்கை திண்டுக்கல் ரயில்வே போலீசார் சோதனை செய்த போது அரசால் தடை செய்யப்பட்ட 5 கிலோ கஞ்சா மற்றும் 20 கிலோ மதிப்புள்ள குட்கா பொருட்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# தாராபுரத்தில் தந்தை பெரியாரின் 147 வது பிறந்த தினம் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மாலை அணிவித்து மரியாதை



திருப்பூர்,செப்.18

தாராபுரத்தில், தந்தை பெரியாரின் 147 வது பிறந்தநாள்விழாதாராபுரம் நகர திராவிடர் கழக சார்பில், பெரியார் திடலில், நகர தலைவர் சின்னப்பதாஸ் தலைமையில் நடைபெற்றது..நகரச் செயலாளர் வள்ளல் சித்திக் அனைவரையும் வரவேற்றார்.. இவ்விழாவில் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் சிறப்பு விருந்தினாராக கலந்துகொண்டுபெரியார் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார். விழாவில் சமூகத்தில் பெரியாரின்பங்குஅவரின் சமூக சிந்தனை குறித்து பலர் பேசினர்.. தவிரபெரியாரின்சிந்தனை கருத்துக்கள் அடங்கிய பதாகைகளை நிர்வாகிகள் கலந்துகொண்டஊர்வலம் அமராவதி சிலையில் துவங்கி, தந்தை பெரியார் திடலில்நிறைவு பெற்றது. விழாவில் தாராபுரம் நகர கழக நிர்வாகிகளான மா.சிவக்குமார் சு.பெரியார்ஜெகன் கி.இளந்தென்றல் மா.தமிழ்நிலவன், மா.தொ.தலைவர் மாவட்ட ப.க.அமைப்பாளர் மாவட்ட தலைவர்மா. பழனிச்சாமி கு.பரத் ப. கோபால் ந.ஜெயபிரகாஷ் மா.இ.துணைதலைவர் மா.இ. துணைசெயலாளர் ஒ.தலைவர், மடத்துக்குளம் நா.செல்வராஜ் வே.கலையரசன் த.முருகேசன் ஒ.அமைப்பாளர்,மடத்துக்குளம் நகர தலைவர், உடுமலை நகர செயலாளர், உடுமலை ச.பெரியார்பித்தன் சி.கந்தவடிவேல் மு.நல்லசிவம் ஒன்றிய தலைவர், உடுமலை ஒன்றிய செயலாளர், உடுமலை நகர தலைவர், வெள்ளகோவில் ஒன்றிய இ.செயலாளர் மாவட்ட இ.செயலாளர் மா.தங்கவேல் செயலாளர், மடத்துக்குளம் அ.ப.நடராசன் ந.மனோகரன் அமைப்பாளர், கடத்தூர் நகர அமைப்பாளர், உடுமலை ம.இளையராஜா ஒன்றிய. இ.தலைவர் ஆ.சதீஸ்குமார் இரா. திராவிடச்செல்வன் ஆ.சேகர் ஒன்றிய இ. தலைவர்,மடத்துக்குளம் நகர இ.தலைவர், வெள்ளகோவில் கிளை கழக தலைவர், அலங்கியம் த.நாகராசன் த.இனியன் அமைப்பாளர், காரத்தொழுவு மா.மாணவரணி தலைவர்மனோஜ் தாராபுரம் கழகத்தோழர்கள் 9இளைஞரணி தலைவர் குடிமங்கலம் ப.மணி சு.திராவிடன் ப.க. ம.பெரியார்நேசன் ம.தர்மன் ப.க காளான் மணி நாத்திகநடராசு நா.மகாமணி ப.க. வ. ராசாராம் ப.க. நா. சாந்தப்பன் நாத்திகசிதம்பரம் கு.நாசும்புலி அ.சக்திவேல் மா.சின்னப்பராஜ் பெ.செல்வராஜ் ச.திராவிடசெல்வன் பெரியார் பிஞ்சுகள்... மீ.மோ.தமிழீலன், ப. மா.பெரியார்வேந்தன், ப.மா.யாழினி, கா.மு. புதியவன், ரா.சி. பெரியார்வேந்தன், ரா.சி. யாழ்மதிவதனி, மா.த.திவித், தே.கோ. புகழ்நீ, தே.கோ.சுடர்நீ, சு.பி.பிரபஞ்சன்கணியூர் கழகத்தோழர்கள் நா.சாமிநாதன் பழ.நாகராசன் க.கு.ராதாகிருஷ்ணன் மா.ராமசாமிக.அர்ச்சுணன் கு.முருகானந்தம் கி.கண்ணன் க.வேலுமணி.க. பொன். குமார் துரையரசன் பழ. சேகர் க.ஆறுமுகம் ,கணேசன், மாரிமுத்து அ.மணியன், உடுமலை கழகத்தோழர்கள், தி. திருமுருகன் சு.வினோத்குமார் வழக்கறிஞர் ராமச்சந்திரன், ராம்குமார் மு.சரவணக்குமார, பழ.பெரியசாமி ப.க. சபரி ஆகியோர் கலந்து கொண்டனர். கோடீஸ்வரன் நகர தி.க இளைஞரணி அமைப்பாளர், பொறியாளர் ரகுநாத் கருஞ்சட்டை துரையன் ஆகியோர் நன்றியுரை வழங்கினர்...

# அரக்கோணம் ஐஎன்எஸ் ராஜாளியில் இந்திய கடற்படையின் தொலைதூர கண்காணிப்பு தொடர்பான கருத்தரங்கு



அரக்கோணத்தில் செயல்பட்டு வரும் இந்தியாவின் முக்கிய கடற்படை தளமான ஐ என் எஸ் ராஜாளியில், இந்திய கடற்படையின் கிழக்கு கமாண்ட் சார்பில், "தொலைதூர கடல்சார் கண்காணிப்பு"தொடர்பான இரண்டு நாள் கருத்தரங்கு செப்டம்பர் 16 முதல் 17 வரை நடைபெற்றது.

கடற்படை கிழக்கு கமாண்ட் பணியாளர் தலைமை அதிகாரி ரியர் அட்மிரல் சாந்தனு ஜா இதில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். மூத்த கடற்படை அதிகாரிகள், சிறப்பு அதிகாரிகள், போயிங் விமான நிறுவன பிரதிநிதிகள் உட்பட பல துறைசார்நிபுணர்கள்இதில் பங்கேற்றனர். இந்த நிகழ்வில், இத்துறை தொடர்பான பல முக்கிய கட்டுரைகளின் தொகுப்பு வெளியிடப் பட்டது. அவை இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் இந்தியாவின் கடல்சார் நலன்களைப் பாதுகாப்பதில் அதிஉயரத்தில் நீண்ட தூரம் பறந்துமுக்கியதகவல்களை சேகரிக்கும் திறன்வாய்ந்த பி8ஐ விமானம் மற்றும் ஹேல் ரக ஆளில்லா விமானங்களின் பங்களிப்புகள் குறித்து விளக்கப்பட்டுள்ளன.

இந்திய கடற்படையின் நீண்டதூர கண்காணிப்பு படைப்பிரிவான ஐஎன்ஏஎஸ்312, பி 8 ஐ விமானத்தை 50,000 மணிநேரம் வானில் இயக்கிய முக்கிய நிகழ்வு இதில் நினைவு கூரப்பட்டது. இந்திய கடற்படையின் விமானப் போக்குவரத்து வரலாற்றில் முதல் முறையாக இந்த மைல்கல் சாதனை எட்டப்பட்டுள்ளது. ஐ என் ஏ எஸ் 312 ஸ்குவாட்ரன், அதிநவீன பி 8 ஐ விமானத்தை ஐஎன்எஸ் ராஜாளியிலிருந்து இயக்குகிறது. கடற்பரப்புகளில் இந்தியா ஆர்வம் கொள்ளும் பகுதிகளில் அது தகவல் சேகரிப்பில் ஈடுபடுகிறது.

அரக்கோணத்தில் அமைந்துள்ள கடற்படை தளமான ஐ என் எஸ் ராஜாளி, பி 8 ஐ விமானத்துடன் ஹேல் ரகட்ரோன்களான எம் கியூ 9பி சீகார்டியன்களையும்இயக்குகிறது. ஐ என் எஸ் ராஜாளி, நீண்ட தூரகடல்சார்கண்காணிப்பு, தகவல் சேகரிப்பு, நீர்மூழ்கி எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும்கண்காணிப்புக்கான மையமாகசெயல்படுகிறது.

# தூத்துக்குடியில் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் சி.த.செல்லப்பாண்டியன் மாலை அணிவித்து மரியாதை செய்தார்



தூத்துக்குடி அண்ணா117வதுபிறந்தநாளை முன்னிட்டு அதிமுக பொதுச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க மாநில வர்த்தக அணி சார்பில் அதிமுக வர்த்தக அணி செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சி.த.செல்லப்பாண்டியன் தலைமையில் பழைய மாநகராட்சி வளாகத்தில் அமைந்துள்ள அண்ணா திருஉருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி துணை செயலாளர்ராஜா, தெற்குமாவட்ட துணை செயலாளர் சந்தனம், வர்த்தக அணி செயலாளர் துரைசிங், சிறுபான்மை பிரிவு பொருளாளர் நாகூர் பிச்சை, மாவட்ட மீனவரணி துணை தலைவர் டெலஸ்பர், மத்திய கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் ராஜகோபால், முன்னாள் அரசு வழக்கறிஞர் ராஜாராம், மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் சண்முகத்தாய், முன்னாள் மாவட்ட மீனவரணி செயலாளர் அகஸ்டின், முன்னாள் மத்திய கூட்டுறவு பண்டக சாலை தலைவர் எட்வின் பாண்டியன், முன்னாள் மாவட்ட எம்ஜிஆர்மன்ற துணை செயலாளர் சகாய ராஜ், மீனவரணி இணைச் செயலாளர் ஜோசப், முன்னாள் தொகுதி செயலாளர் ஞாயம் ரோமால்ட், மத்திய வடக்கு பகுதி சிறுபான்மை பிரிவு செயலாளர் அசன், முன்னாள் நகர் மன்ற துணை தலைவர் ரத்தினம், வட்ட செயலாளர்கள் சகாயராஜ் அருண் குமார் அந்தோனி ராஜ் மாவட்ட பிரதிநிதிகள் அசரியான் அந்தோனியப்பா ஜேடியம்மா முன்னாள் எம் ஜி ஆர் மன்ற இணைச் செயலாளர் முருகேசன் முன்னாள் வட்ட செயலாளர்அன்புலிங்கம்மோகன் முன்னாள் யூனியன் கவுன்சிலர் அமலதாசன் பழம் பெருமாள் தாய் போக்குவரத்துபிரிவுநிர்வாகிகள் டெரன்ஸ் பெலிக்ஸ் சகாயராஜ் சங்கர் ராஜேந்திரன் பேச்சியப்பன் முருகன் சிறுபான்மை பிரிவு அனிஸ்டஸ் பிரபாகரன்அபுதாஹிர் நிர்வாகிகள் சந்தனராஜ் அந்தோனி சேவியர் ஸ்டாலின் தனுஷ் அந்தோனி ராஜ் பாபநாசம் இசக்கி முத்து அந்தோனி செல்வராஜ் ஆறுமுகம் சித்திரை வேல் மணிகண்டன் ராஜசேகர் சுப்புராஜ் ஜோதிகா மாரி ஆபிரகாம் முனியசாமி ராஜசேகர் வெங்கடாசலம் பொன்ராஜ் ஆறுமுகம், மகளிர் அணியினர் ஜீவா ஜிபுலியா அன்னத்தாய் பபினாம்மா புஷ்பா என்ற பாப்பா முத்துமாரி ரெக்ஸி உள்படப பலர் கலந்து கொண்டனர்.

# ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் இளையராஜா தலைமையில் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு மாலை அணிவித்து மரியாதை செய்து உறுதிமொழி எடுத்தனர்




தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், மீனவர்நலன் மீன்வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் வழிகாட்டுதலின் போில் ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில்அண்ணாவின்117வது பிறந்த தினத்தை முன்னிட்டு மேலமடத்தில் வைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த அண்ணாவின் திரு உருவப்படத்திற்கு ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் இளையராஜா தலைமையில் அவரது திருஉருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்' என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இதில் ஒன்றிய செயலாளர் இளையராஜா உறுதிமொழியை கூற திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் பின் தொடர்ந்து ஓரணி தமிழ்நாட்டில் இணைந்துள்ளஒருகோடி குடும்பத்தையும் சேர்த்து தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டோம், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதாச்சாரத்தை குறைக்கும் தொகுதி மறுவரையறையை எதிராக போராடுவேன், வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழக வாக்காளர்களின் உரிமையை பறிக்கு எஸ்ஐஆர் யை எதிராக நிற்பேன், இளைஞர்களுக்கு எதிரான திட்டங்களை எதிர்த்து நிற்பேன், மாணவர்களின் உரிய கல்வி நிதிக்காக போராடுவேன்' போன்ற உறுதிமொழிகள் எடுத்தனர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய அவைத்தலைவர் சுப்பிரமணியன், துணை செயலாளர்கள் வேல்ராஜ், ராஜாமணி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் துரைமுருகன்,நிர்வாகிகள் முத்தையாசேட், சுந்தர்ராஜ், ராமகிருஷ்ணன், முருகன், மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் பியூலா, வள்ளியம்மாள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# நிலக்கோட்டை அருகே கூடுதல் பஸ்கள் இயக்க வேண்டும் பொதுமக்கள் கோரிக்கை!

**நிலக்கோட்டை,செப்.**18–

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகாவில் நிலக்கோட்டை பட்டி வீரன்பட்டி, விளாம்பட்டி, ராமராஜபுரம், வத்தலக்குண்டு கொடைரோடு என பல்வேறு பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகள்,தனியார் கல்லூரிக்கும், அரசு மகளிர் கல்லூரிக்கும், தனியார் பாலிடெ க்னிக் உள்ளிட்ட பல்வேறு கல்வி நிலைய ங்களில் பயில்வதற்கு நிலக்கோட்டை உள்ள கிராமப் பகுதிகளில் இருந்து தினந்தோறும் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் நிலக்கோட்டைக்கு வந்து அங்கிருந்து அரசு பஸ்சை பிடித்து பள்ளிக்கு செல்கின்றனர்.

இந்நிலையில் காலை நேரத்தில் அதிக மாணவர்கள் இருப்பதால் ஏற்கனவே இயக்கப்படும் அரசு பஸ்களில் ஆபத்தான முறையில் தொங்கிக் கொண்டு மாணவர்கள் செல்கின்றனர். இதன் காரணமாக தினந்தோறும் உயிரை கையில் பிடித்து பள்ளிக்குச் செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதனைத் தவிர்க்க அரசு பஸ்களை காலை நேரத்தில் சிறப்பு பஸ்களாக இயக்க வேண்டும் என்று மாணவர்களின் பெற்றோர்கள்மற்றும்ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நேற்று நிலக்கோட்டையில் இருந்து அணைப்பட்டி வழியாக விக்கிரமங்கலம் செல்லும் பஸ்ஸில் மாணவர்கள் அதிக அளவு தொங்கிச் சென்றதால் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையில் மாணவர்கள் பயணிக்கும் நிலை உள்ளது. எனவே அதிக பஸ்களை இயக்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

# டெல்லியில் அமித்ஷாவை சந்தித்தபோது எடப்பாடி பழனிசாமி பேசியது என்ன? பரபரப்பு தகவல்கள்

புதுடெல்லி,,செப். 18

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மக்களைசந்தித்து வருகிறார்.

இதற்கிடையே, அ.தி.மு.க. அமைப்பு செயலாளராகவும், முன்னாள் அமைச்சராகவும் இருந்த கே.ஏ.செங்கோட்டையன், "அ.தி.மு.க.வில் இருந்துநீக்கப்பட்டவர்கள் மீண்டும் சேர்க்கப்பட வேண்டும்" என்று போர்க்கொடி தூக்கியதுடன் 10 நாள் கெடுவும் விதித்தார். அதனைத் தொடர்ந்து, அ.தி.மு.க.வில் கே.ஏ.செங்கோட்டையன் வகித்து வந்த பொறுப்புகளை பறித்து எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டார்.

இந்த நிலையில், தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்திய கே.ஏ.செங்கோட்டையன் திடீரென டெல்லி சென்று மத்திய உள்துறை மந்திரிஅமித்ஷா, நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் ஆகியோரை சந்தித்தார்.

இதற்கிடையே, கே.ஏ.செங்கோட்டையன்விதித்த 10நாள்கெடு நேற்று முடிவடைந்த



நிலையில், திடீரென அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி டெல்லி புறப்பட்டு சென்றார். அங்கு விமான நிலையத்தில் பத்திரிகையாளர்கள் அவரிடம், டெல்லி வருகைக்கான காரணம் குறித்து கேட்டபோது, பதற்றத்துடனேயே காணப்பட்டார். சரியாக பதில் கூறாமல் சென்றுவிட்டார்.

இந்த நிலையில், புதிதாக துணை ஜனாதிபதியாக பொறுப்பேற்றிருக்கும் சி.பி.ராதாகிருஷ்ணனை சந்தித்து வாழ்த்து தெரிவித்த எடப்பாடி பழனிசாமி, நேற்று இரவு உள்துறை மந்திரி அமித்ஷாவை அவரது இல்லத்தில் சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின்போது, முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, திண்டுக்கல் சீனிவாசன், கே.பி.முனுசாமி, எம்.பி.க்கள் தம்பிதுரை, சி.வி.சண்முகம், ஐ.எஸ். இன்பதுரை உள்ளிட்டோர் உடன் இருந்தனர். இரவு விருந்தும் அமித்ஷாவின் இல்லத்திலேயே பரிமாறப்பட்டது.

இந்த நிலையில், எடப்பாடி பழனிசாமி டெல்லி பயணம் குறித்தும், அமித்ஷாவை சந்தித்தது குறித்தும், அதுவும் அமித்ஷாவை சந்தித்துவிட்டு வெளியே வரும்போது, முகத்தை கைக்குட்டையால் மூடி க்கொண்டுவந்தார் என்றும் தமிழக அரசியலில் பரபரப்பாக பேசப்பட்டது.

இதனால், மனம் திறக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளான எடப்பாடி பழனிசாமி, தனது எக்ஸ் சமூக வலைதளத்தில் அமித்ஷாவுடன் சந்திப்பு குறித்த புகைப்படங்களை இன்று காலை வெளியிட்டார். மேலும், முத்துராமலிங்க தேவருக்கு பாரத ரத்னா விருது வழங்க அமித்ஷாவிடம் கோரிக்கை விடுத்ததாக தெரிவித்து இருந்தார்.

ஆனாலும், அவர் அமித்ஷாவிடம் பேசியது குறித்த உண்மைத்தகவல் வெளிவராமலேயே இருந்தது. தற்போது அந்த தகவல் வெளிவந்துள்ளது. அதாவது, தமிழக அமைச்சர்களான துரைமுருகன், கே.என். நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அனிதா ராதாகிருஷ்ணன், முன்னாள்அமைச்சர்க.பொன்முடி மீதான அமலாக்கத் துறை வழக்குகளை தேர்தலுக்கு முன்னால் விரைவாக விசாரிக்க உத்தரவிடுமாறு கோரிக்கை விடுத்ததாக பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளிநாட்டு கார் இறக்குமதி செய்த வழக்கு, டாஸ்மாக்முறைகேடு வழக்கு, மணல் முறைகேடு வழக்குகளையும் துரிதப்படு த்துமாறு கோரிக்கை விடுத்ததாகவும் கூறப்படுகிறது.

# நயினார் நாகேந்திரன் அடுத்த மாதம் சுற்றுப்பயணம்!

சென்னை,செப்.18

தமிழகம் முழுவதும் அக்டோபர் மாதம் முதல் நயினார் நாகேந்திரன் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். அதன்படி, தினசரி 3 மாவட்டங்களில் மக்கள் சந்திப்பு நடத்த ஆலோசனை கூட்டத்தில் திட்டமிடப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழக பாஜக சார்பில் சிந்தனை அமர்வு கூட்டம் சென்னையில் நேற்று நடந்தது. இதற்கு கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் பி.எல்.சந்தோஷ் தலைமை தாங்கினார்.மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், முன்னாள் மாநில தலைவர்கள் தமிழிசை, பொன்.ராதா கிருஷ்ணன், தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன், மேலிட பொறுப்பாளர்கள் சுதாகர் ரெட்டி, அரவிந்த் மேனன், மாநில துணை தலைவர்கள் டால்பின்ஸ்ரீதர், கரு.நாகராஜன், குஷ்பு, மாநில செய்தி தொடர்பாளர்ஏ.என்.எஸ்.பிரசாத் உள்பட மூத்த நிர்வாகிகள், அணிப்பிரிவு தலைவர்கள் கலந்து கொண்டனர்.பிறபகலுக்கு பிறகு அண்ணாமலை கூட்டத்தில் பங்கேற்றார்.



இதையடுத்து பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், தென் தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கான பாரம்பரிய வாக்குகளை எப்படி ஒருங்கிணைப்பது, பெண் வாக்காளர்களை எப்படி ஈர்ப்பது, போராட தகுந்த பகுதிவாரியான பிரச்சினைகள் என்ன என்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

பின்னர், பேசிய அண்ணாமலை, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியின் சுற்றுப் பயணத்துக்கு அதிகளவில் கூட்டம் கூடுவதாகவும், தன்னெழுச்சியாக பாஜக நிர்வாகிகளும் பங்கேற்பதாகவும் தெரிவித்தார். இதேபோல் தமிழகம் முழுவதும் கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும் என்றார். மேலும், அக்டோபர் மாதம் முதல் தமிழகம் முழுவதும் நயினார் நாகேந்திரன் சுற்றுப்ப யணம் மேற்கொண்டு, மக்கள் சந்திப்பை நடத்தவுள்ளதாகவும் தினசரி 3 மாவட்டங்களில்சுற்றுப்பயணம்செய்து பிரச்சாரம் மேற்கொள்வார் என்றும் அப்போது அண்ணாமலை தெரிவித்தார்.

# விஜய் வருகையால் எங்கள் கூட்டணிக்கு எந்த பாதிப்பும் இல்லை; மாணிக்கம் தாகூர் எம்.பி. பேட்டி!

சிவகாசி, செப்.18–

சிவகாசி ஒன்றியத்திற்குட்பட்ட மீனம்பட்டியில் விருதுநகர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து சமுதாயக்கூடம் மற்றும் நூலகம் புதிதாக கட்டப்பட்டது. மற்றும் சிவகாசி மாநகராட்சிக்குட்பட்ட விளாம்பட்டி மற்றும் திருத்தங்கல் செல்லும் சாலைகளி ன் இரண்டு இடங்களில் உயர் கோபுர மின் விளக்குகள் புதிதாக அமைக்கப்பட்டது. இவைகளை மக்களின் பயன்பாட்டிற்கு மாணிக்கம்தாகூர் எம்.பி., தொடங்கி வைத்தார். அவருடன் அரசன்அசோகன்எம் எல்ஏ., மேயர் சங்கீதா, ஆணையாளர் சரவணன், மாமன்ற உறுப்பினர்கள் சரவணக்குமார், ஜெயினுலாபுதீன், ரவிசங்கர் மாநகரதிமுக செயலாளர் உதயசூரியன், மற்றும் திமுக காங்கிரஸ் கட்சிகளின் நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து மாணிக்கம் தாகூர் எம்பி செய்தியாளர்களை சந்தித்த போது கூறியதாவது:

நடிகர் விஜய் அரசியல் கட்சி தொடங்கி அடுத்த வருடம் தேர்தலை சந்திக்க உள்ளார். தேர்தல் முடிவுக்குப் பின்னர் தான் அவரை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? இல்லையா? என்பது தெரியவரும்.

அரசியல் கட்சிகள் நடத்தும் நிகழ்ச்சிகளில் தமிழ் நாட்டில் எப்போதும் மக்கள்கூட்டம்அதிகமாகதான் வரும். அ.தி.மு.க. கடந்த எம்.பி. தேர்தலில் பல இடங்களில் 3வது இடத்துக்கு சென்றபோதிலும் எடப்பாடி பழனிச்சாமியைப் பார்க்கக் கூட்டம் இன்னும் வருகிறது.

தமிழகத்தில் கூட்டம் கூடுவதற்கும், வாக்கிற்கும் எந்த சம்மந்தமுமில்லை, கூட்டம் கூடுவதை வைத்து எதையும் கணித்துவிட முடியாது. நடிகர் விஜய் வருகையால் எங்கள் கூட்டணிக்கு எவ்வித பாதிப்புமில்லை. இந்தியா கூட்டணி பலமாகவுள்ளது.

இந்தியா கூட்டணியின் முக்கிய அங்கமாக வுள்ள திமுக அரசு மக்களுக்கு பல்வேறு நல்ல திட்டங்க ளை செய்துள்ளது.

மக்கள்தான் எஜமானர்கள்.விஜய் தற்போது 3–வது கூட்டணியில் உள்ளார்.

விஜய் எந்தக் கூட்டணிக்கும்வரப்போவதில்லை. அவர் தனித்து தான் போட்டியிடவுள்ளார், அவரைத் தேடியும் யாரும் போகவில்லை. காலம் தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

சீமான் திட்டாத ஆளே கிடையாது.முதலில் காங்கிரஸ், திமுக அதிமுக, பாஜக என அனைத்து அரசியல் கட்சியினர்களையும் சீமான் திட்டியுள்ளார்.

சீமான் அரசியல் என்பது மற்ற தலைவர்களைத் திட்டுவது தான்.

5 ஆண்டுகள் தொடர்ச்சியாக த்திட்டிக் கொண்டேயிருப்பார்.கடைசிஇரண்டு மாதம் காணாமல் போய்விடுவார்.

சிவகாசி சாட்சியார்புரத்தில் கட்டப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலத்துக்கு முன்னாள் அமைச்சர் கே.டி. ராஜேந்திரபாலாஜி எதுவும் செய்யவில்லை. இந்த ரயில்வே மேம்பாலம் வர முக்கிய காரணம் தி.மு.க. அரசு தான். அதற்கான முயற்சிகளை அமைச்சர்கள் தங்கம்தென்னரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன், அரசன் அசோகன் எம்.எல்.ஏ., ஆகியோர் எடுத்தனர். மத்தியஅரசின்பங்குத்தொகையைப் பெற்றுத் தருவதற்கு என்னால் முடிந்த நடவடிக்கைகளை எடுத்தேன். என்றார்.

# 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் அரிய நிகழ்வு: கூடலூரில் பூத்த நீலக்குறிஞ்சி பூ சுற்றுலாப் பயணிகள் பரவசம்

கூடலூர்,,செப். 18

குறிஞ்சிப் பூ என்பது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் என்று நாம் அனைவரும் கேள்விப்பட்டிருக்கிறோம். நீலக்குறிஞ்சி என்ற இந்த வகைப் பூ, நீலகிரி, கொடைக்கானல் உள்ளிட்ட மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் கேரள வனப் பகுதியில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும். ஸ்ட்ரோபிலாந்தஸ் குந்த்தியானா என்ற அறிவியல் பெயர் கொண்ட அரிய தாவரமான நீலக்குறிஞ்சி தற்போது கூடலூர் தாலுகா ஓவேலி வனப்பகுதியில் 12 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது பூத்திருக்கிறது. இதை வனத்துறையினர் கண்டுபிடித்து அரசுக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

குறிஞ்சி மலர்கள் பூத்துக் குலுங்கும்போது ஒட்டு



மொத்த மலைப்பகுதியும் நீல நிறத்தில் தெரிவது கண்கொள்ளா காட்சியாக இருக்கும். தற்போது, குறிஞ்சிப் பூ பூத்திருக்கும் தகவலை கேள்விப்பட்டவுடன் சுற்றுலாப் பயணிகள் குவியத் தொடங்கியிருக்கிறார்கள். நீலக்குறிஞ்சி பூவைப் பார்த்து பரவசம் அடைந்த அவர்கள், தங்களுடைய செல்போனிலும் செல்பிபுகைப்படம்எடுத்து மகிழ்ந்தனர்.

# கோவிலாங்குளம் பிள்ளையார் கோவில் ஊரணியை தூர்வார கோரிக்கை!

கமுதி, செப்.17–

கமுதி அருகே குடிநீர் ஆதாரமாக விளங்கும் ஊரணியை தூர்வார வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அடுத்துள்ள கோவிலாங்குளத்தில் குடிநீர் ஆதாரமாக விளங்கும் பிள்ளையார் கோயில் ஊரணி கடந்த 20 ஆண்டுகளாக தூர் வரப்படாமல் உள்ளதால் மண் மேவி காணப்படுகிறது. மேலும் மழைக்காலத்தில் சிறிய அளவு தண்ணீரை கூட சேமித்து வைக்க முடியாமல் மழைநீர் அனைத்தும் வெளியேறி வீணாவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் குடிநீருக்காக வாரத்திற்கு இரண்டு முறை வரும் காவிரி கூட்டு குடிநீர் தண்ணீரை பயன்படுத்தி வருவதாகவும், புழக்கத்திற்கு தண்ணீரை விலை கொடுத்து வாங்குவதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



எனவே ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் மற்றும் மாவட்ட நிர்வாகம் தலையிட்டு கோவிலாங்குளம் பிள்ளையார் கோயில் ஊரணியை மழைநீர் சேமிக்கும் வகையில் தூர்வாரி, கரைகளை உயர்த்தி பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.


# சென்னைக்கு அருகே புதிய சர்வதேச நகரம்; மதுராந்தகம் தேர்வு

சென்னை செப். 18

சென்னை, டெல்லி, மும்பை, புனே போன்ற மாநகரங்களில் இருக்கக்கூடிய போக்குவரத்து நெரிசல், காற்றின் தரம் குறைதல், சுற்றுச்சூழல் சீர்கேடு, மக்கள் தொகை பெருக்கம் போன்ற பலவிதமான பிரச்சினைகள் குறைக்கும் நோக்கில் துணை நகரங்கள் உருவாக்கப்படுகின்றன.

அதன்படி, அனைத்து வசதிகளையும் உள்ளடக்கி, 2,000 ஏக்கரில் சர்வதேச நகரம் உருவாக்க, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஐந்து இடங்களை அடையாளம் கண்ட ஆய்வு நிறுவனங்கள் டிட்கோவுக்கு அறிக்கை சமர்ப்பித்தன.

அதனடிப்படையில்,



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் 2,000 ஏக்கர் பரப்பளவில் புதிய சர்வதேச நகரம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இந்த நிலையில், சர்வதேச நகரம் அமைப்பதற்கான மாஸ்டர் பிளான் தயாரிக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்(டிட்கோ) டெண்டர் கோரியுள்ளது.

தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், நிதி நுட்ப வணிக மண்டலங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், உயர் தொ ழில்நுட்ப நிறுவன ங்கள், வங்கி மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள், வணிக வளாகங்கள், வர்த்தக மையங்கள், மாநாட்டுக் கூடங்கள் மட்டுமன்றி, அரசு மற்றும் தனியார் துறையின் மூலம் கல்வி மற்றும் சுகாதாரச் சேவைகள் அளிக்கும் நிறுவனங்களும் இந்நகரத்தில் அமைக்கப்படும்.

சமூகத்தின் உயர் வருவாய் கொண்ட வகுப்பினர், மத்திய தர வகுப்பினர் மற்றும் குறைந்த வருவாய் கொண்ட வகுப்பினர் என அனைவருக்குமான வீட்டு வசதிகள் நிறைந்த பன்னடுக்குக் கட்டடங்கள் கொண்டதாக இந்நகரம் அமையும். விரிவானசாலைகள், தகவல் தொழில்நுட்ப மற்றும் பசுமை மின்சக்தி அமைப்புகள், பகிர்ந்த பணியிடச் சேவை மற்றும் நகர்ப்புரச் சதுக்கங்கள், பூங்காக்கள் போன்ற பொழுது போக்குச் சேவை கட்டமைப்பு வசதிகளும் இந்நகரில் இடம்பெறும்.



வேடசந்தூர் அருகே உள்ள லட்சுமணபட்டி நால்ரோட்டில் நின்று இருந்த லாரியின் மீது மற்றொரு லாரி மோதிக் கிடக்கும் காட்சி.

# தங்கச்சிமடம் ஊராட்சியில் மறுசுழற்சி பாதுகாவலர்களுக்கு அடையாள அட்டை வழங்கல்!



ராமநாதபுரம், செப்,17–

ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் ஊராட்சியில் ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா நிறுவன தலைவர் டாக்டர் கல்பனா சங்கர் ஆலோசனையின் பேரில் ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா நிறுவனம் பிளாஸ்டிக் கழிவு பொருட்களை சேகரித்து தரம் பிரித்து பூமியை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மறுசுழற்சி பாதுகாவலர்களை கண்டெடுத்து புதுமையான வழிமுறைகளுடன் ,பங்கேற்க வைத்தல், கல்வி அளித்தல், வலிமைப்படுத்துதல் என மூன்று படி நிலைகளுடன் செயல்படுத்தப் பட்டு வருகிறது. அதன்படி ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா நிறுவனம் தங்கச்சிமடம் ஊராட்சியுடன் இணைந்து குப்பை சேகரிக்கும் முறைசாரா மறுசுழற்சி பாதுகாவலர்களுக்கு அடையாள அட்டை, உண்டியல், சுகாதார மற்றும் பாதுகாப்பு பொருட்கள் வழங்கும் நிகழ்வு மண்டபம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஜெயமுருகன் தலைமையில் நடந்தது.

தீயணைப்புதுறை அலுவலர் அருள்ராஜன், ஊராட்சி செயலாளர் பன்னீர்செல்வம், ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா ஹோஸ்டல் சர்குலாரிட்டி திட்ட துணை மேலாளர் ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். 25 மறுசுழற்சி பாதுகாவலர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வை ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா திட்ட அலுவலர் சத்தியபிரியா, நாகேந்திரன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# கொடியில் மட்டுமல்ல கொள்கையிலும் அண்ணாவை கொண்டதுதான் அ.தி.மு.க. எஸ்.டி .கே .ஜக்கையன் பேச்சு!

சின்னமனூர், செப்.18–

அ.தி.மு.க. தேனி மேற்கு மாவட்ட அ.தி.மு.க. மற்றும் சின்னமனூர் கிழக்கு ஒன்றியத்தின் சார்பாக சின்னஓவலாபுரத்தில் பேரறிஞர் அண்ணாவின் 117 –வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் ஒன்றிய செயலாளர் கண்ணன்தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தலைமைக் கழக பேச்சாளர்கள் பழனிச்சாமி,ஜீவா கணேசன் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் பேசிய அ.தி.மு.க. தேனி மேற்கு மாவட்ட செயலாளர் எஸ் டி கே ஜக்கையன் : புரட்சித்தலைவர் மறைவிற்குப் பின்பு கட்சியை புரட்சித்தலைவி மீட்டெடுத்தது போல், புரட்சித்தலைவி மறைவிற்கு பின்பு எடப்பாடியார் மீட்டுள்ளார். சென்னை மாகாணம் என்பதை தமிழ்நாடு என்று பெயர் மாற்றிய, இருமொழிக்கொள்கையை சட்டப்பேரவையில் உறுதியாக்கிய அறிஞர் அண்ணாவின் உருவப்படத்தை கொடியில் மட்டுமல்ல, அவரது கொள்கையை இன்று வரை கடைபிடிப்பது அ.தி.மு.க. மட்டுமே. அதிமுக ஆட்சி அமைத்தஉடன்தாலிக்கு தங்கம், மாணவர்களுக்கு மடிக்கணினி உள்ளிட்ட நலத்திட்டங்கள் மீண்டும் கொண்டு வரப்படும். இழந்த தமிழகத்தின் உரிமைகள் மீட்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியில் பாலமணிமார்பன், பாண்டியராஜ், கல்யாணக்குமார், ஈஸ்வரன், வினோத்குமார், எம் ஆர் கார்த்திகேயன், கணபதி, மனோகரன், சீனிவாசன், மார்க்கண்டன், கார்த்திகேயன், சக்கரவர்த்தி, சிவக்குமார், பாஸ்கரன் உள்ளிட்ட மாநில மாவட்ட பொறுப்பாளர்கள், ஒன்றிய, நகர், பேரூர் மற்றும் கிளைக் செயலாளர்கள், சார்பு அணி பொறுப்பாளர்கள், தொண்டர்கள் பல்வேறு பகுதியில் இருந்து வந்திருந்த திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

18.9.2025

# கடல் நீரில் நெற் பயிர் விவசாயம்; சீன விஞ்ஞானிகள் சாதனை!




பெய்ஜிங், செப்.18–

சீன விஞ்ஞானிகள் கடல் நீரில் வளரக்கூடிய அரிசியை உருவாக்குவதன்மூலம் ஒரு புதிய முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். உப்புசகிப்புத்தன்மை கொண்ட அரிசி என்றும் அழைக்கப்படும் இந்த "கடல் நீர் அரிசி", பாரம்பரிய பயிர்கள்வாழ முடியாத உப்புகார மண்ணில் செழித்து வளர வளர்க்கப்படுகிறது. இந்த கண்டுபிடிப்பு உணவுப் பாதுகாப்பிற்கு மகத்தான நம்பிக்கையை அளிக்கிறது, குறிப்பாக மண் உவர்ப்புத்தன்மையால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் சீனாவில் மட்டும் மில்லியன் கணக்கான ஹெக்டேர்களை பாதிக்கும் ஒரு பிரச்சினை.

2030 ஆம் ஆண்டுக்குள், இந்த உப்பு எதிர்ப்பு அரிசி, ஆராய்ச்சியாளர்களின் மதிப்பீடுகளின்படி, 200 மில்லியன் மக்களுக்கு உணவளிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. மரபணு மாற்றம் அல்லாமல், பல தசாப்தங்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட இனப்பெருக்கம் மூலம் இந்த அரிசி பயிரிடப்பட்டது. இது காட்டு உப்பு எதிர்ப்பு அரிசியின் பண்புகளை அதிக மகசூல் தரும் வணிக ரகங்களுடன் ஒருங்கிணைக்கிறது.

விளைவு: உப்புச்சூழல்களில் உயிர்வாழ்வது மட்டுமல்லாமல், குறிப்பிடத்தக்க அறுவடைகளையும் உற்பத்தி செய்யும்ஒருஅரிசிவகை. மஞ்சள் கடலுக்கு அருகிலுள்ள சோதனை வயல்களில், மகசூல் ஒரு ஹெக்டேருக்கு 6.5 டன் வரை எட்டியது இது சிறந்த சூழ்நிலையில் பாரம்பரிய அரிசியுடன் ஒப்பிடத்தக்கது. சீனாவைத் தாண்டி, இந்த முன்னேற்றம் வங்கதேசம், எகிப்து மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளுக்கு ஒரு திருப்பு முனை யாக இருக்கலாம், ஏனெனில் கடல் மட்ட உயர்வு நன்னீர் விவசாய நிலங்களை அச்சுறுத்துகிறது. உலகளவில் 1 பில்லியன் ஹெக்டேர் உப்பு மண்ணைக் கொண்டு, தரிசு நிலத்தை நெல் வயல்களாக மாற்றுவது இனி ஒரு தொலைதூரக் கனவாக இருக்காது. காலநிலை மாற்றம் மற்றும் உணவுப் பற்றாக்குறையை ஒன்றாகச் சமாளிக்கக்கூடிய எதிர்காலத்தை நோக்கிய ஒரு சக்திவாய்ந்த படியாகும்.



வட மாவட்டங்களில் பெய்த மழையால் திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

# போலீஸ்காரர் தூக்குப்போட்டு தற்கொலை!



பழனி செப். 18 –

பழனி அருகே கோவையில் பணியாற்றிய ஆயுதப் படை போலீஸ்காரர் குடும்ப பிரச்சனையில் வீட்டில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

பழனி அருகே உள்ளது கீரனூர். இந்த ஊரை சேர்ந்தவர் ஹசன் முகமது வயது 34. இவர் கோவை சூலூரில் ஆயுதப்படை போலீஸ்காரராக வேலை பார்த்து வந்தார். திருமணமாகி தர்ஷிலிமா நஸ்ரின் என்ற மனைவி உள்ளார். விடுமுறையில் வந்திருந்தார். அவருக்கு குடும்ப பிரச்சினை இருந்ததால், மனம் உடைந்து காணப்பட்டார் இதனால் ஏற்பட்ட மன உளைச்சலில், வீட்டில் யாரும் இல்லாத பொழுது, தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி பழனி கீரனூர் போலீசார் வழக்கு பதிவு செய்து, உடலை கைப்பற்றி பழனி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்

# தேர்தலில் மாற்றுத்திறனாளிகள் எளிதாக வாக்களிக்க பிரத்யேக வசதி!

சென்னை: செப்.18–

மாற்றுத் திறனாளியான வைஷ்ணவி ஜெயக்குமார் உயர் நீதி மன்றத்தில் ஒரு மனுதாக்கல்செய்திருந்தார்.

அந்த மனுவில், கடந்த 2014ம் ஆண்டு நடந்த மக்களவை தேர்தலின்போது மாற்றுத் திறனாளிகள் வாக்குச்சாவடிகளை எளிதில் அணுகி வாக் களிக்கும் வகையில் தேவையான வசதிகளை சட்டப்பூர்வமாக செய்து கொடுக்கவும், வசதிகள் செய்யப்பட்டு இருப்பதை உறுதி செய்யவும் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.வஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், மாற்றுத் திறனாளிகள் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகளை தேர்தல் ஆணையம் ஏற்றுக்கொண்டுள்ளது. வாக்குச்சாவடிகளை அணுகும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் பார்வையற்றோர் வாக்களிக்க உரிய வசதிகளை செய்து கொடுக்கவும் உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டது.

அதையடுத்து நீதிபதிகள், தேர்தலில் வாக்களிக்க மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கவும், அதன்படி மாற்றுத்திறனாளிகளுக்கான சட்ட விதிகள் முழுமையாக அமல்படுத்தப்படுவதையும் தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும். ஏற்கெனவே நடைபெற்ற தேர்தலில் இந்த விதிகள் முழுமையாக அமல்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்தும் ஆய்வு செய்து விரிவான பதில்மனு தாக்கல் செய்ய வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டு விசாரணையை 4 வார காலத்துக்கு நீதிபதிகள் தள்ளி வைத்துள்ளனர்.

## இன்றைய ராசி பலன்கள் (17.9.2025)

**மேஷம்** – புதிய திட்டங்கள் முன்னேற்றம் காணும். உழைப்புக்கு மதிப்பு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி.

**ரிஷபம்** – சிலர் உங்களின் ஆலோசனையை நாடுவார்கள். செலவுகள் கட்டுப்பாட்டில் இருக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை.

**மிதுனம்** – பணியிடத்தில் பாராட்டு கிடைக்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு உண்டு. மனதில் உற்சாகம் அதிகரிக்கும்.

**கடகம்** – சிறிய வாக்குவாதங்கள் ஏற்படலாம். பொறுமையுடன் நடந்தால் பலன் உண்டு. குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும்.

**சிம்மம்** – பொருளாதார வளர்ச்சி உண்டு. நண்பர்களால் உதவி கிடைக்கும். மனதில் நம்பிக்கை அதிகரிக்கும்.

**கன்னி** – புதிய தொடர்புகள் உருவாகும். உழைப்பால் சிறப்பு அடைவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**துலாம்** – வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர்களின் அன்பு கிடைக்கும். பழைய சிக்கல்கள் தீரும்.

**விருச்சிகம்** – சில விஷயங்களில் மன அழுத்தம் ஏற்படலாம். செலவுகள் கூடும். திடீர் பயணங்கள் வரும்.

**தனுசு** – உங்களின் முயற்சிகள் பலன் தரும். சமூகத்தில் மரியாதை கிடைக்கும். நல்ல செய்தி வரும்.

**மகரம்** – அதிக பொறுப்புகள் வரும். உழைப்புக்குபலன்கிடைக்கும். உறவுகளில் புரிதல் வளரும்.

**கும்பம்** – புதிய வாய்ப்புகள் வரும். நண்பர்கள் ஆதரவு தருவார்கள். ஆன்மீக சிந்தனைகள் அதிகரிக்கும்

**மீனம்** – பணவரவு மேம்படும். குடும்பத்தில் சந்தோஷம் ஏற்படும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.

# சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் சார்பில் கோரிக்கை மாநில மாநாடு!

சென்னை:செப்.18–

கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர் சங்கங்கள் கூட்டமைப்பின் மாநில மாநாடு நவம்பரில் நடைபெற உள்ளது.

இது தொடர்பாக மாநில ஒருங்கிணைப்பாளர் மு.வரதராஜன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக சத்துணவு திட்டத்தில் இன்றைக்கு ஏறத்தாழ 85 ஆயிரம் காலிப் பணியிடங்கள் நிரப்படாமல் உள்ளன. அதேபோல் சத்துணவு ஊழியர்களுக்கு குறைந்த பட்சஓய்வூதியமாகரூ.7,850 வழங்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தும் தமிழக அரசு இது வரை அமல்படுத்த இல்லை.

தமிழகத்தில் தாய் சங்கங்கள் என்று கூறப்படும் ஜாக்டோ ஜியோ, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலக ஒன்றியம், சிஎன்டி அலுவலர் கழகம் போன்ற சில அமைப்புகள் 35 ஆண்டுகளாகசத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களின் உழைப்பை சுரண்டி வருகின்றன.எங்களது கோரிக்கைகள் தொடர்பாக வாய் திறப்பதே இல்லை.

உச்ச நீதி மன்ற தீர்ப்பை அமல்படுத்தி, மருத்துவக் காப்பீடு, அகவிலைப் படியுடன் ஓய்வூதியத்தை குடும்ப ஓய்வூதியமாக மாற்றி வழங்க வேண்டும் என்பதே எங்களது கோரிக்கை.

இதை வலியுறுத்தி தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர் சங்கங்களின் மாநில மாநாட்டை சென்னையில் வரும் நவம்பர் மாதம் நடத்தவுள்ளோம். இந்த மாநாட்டில் பங்கேற்க முதல்வருக்கும், துணை முதல்வருக்கும் அழைப்பு கொடுத்துள்ளோம். தமிழகத்தில் மொத்தமாக 2.5 லட்சம் சத்துணவு ஊழியர்கள் உள்ளனர். ஒரு குடும்பத்துக்கு 4 முதல் 5 ஓட்டுக்கள் என்றாலும் 10 லட்சம் ஓட்டுக்கள் வரும். ஆனால் எந்தவொரு அரசியல் கட்சி பின்னாலும் நாங்கள் செல்ல தயாராக இல்லை.

அதேநேரம் தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் கூடி முடிவெடுத்து, 2026 தேர்தலில் யாருக்கு வாக்களிப்போம் என்பதை தெளிவுபடுத்துவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# அந்த ரெண்டு வார்த்த..! "DUDE" குறித்து பிரதீப் ரங்கநாதன் கொடுத்த அப்டேட்




லவ் டுடே, டிராகன் படத்தின் வெற்றியை தொடர்ந்து விக்னேஷ் சிவன் இயக்கத்தில் எல்ஐகே படத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ளார்.அதனை தொடர்ந்து இயக்குனர் சுதா கொங்கராவிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய கீர்த்தீஸ்வரன் இயக்கத்தில் அடுத்ததாக ட்யூட் படத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ளார். இப்படத்தில் அவருக்கு ஜோடியாக பிரேமலு புகழ் மமிதா பைஜூ நடித்துள்ளார்மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம்தயாரிக்கும்இப்படத்திற்குசாய்அபயங்கர்இசையமைத்துள்ளார். இவர்களுடன் சரத்குமார், ரோகினி, ஹ்ரிதுஹரூன்,டிராவிட் மற்றும் பலர் நடித்துள்ளனர்.இதையும் படியுங்கள்: உலகளவில் ரூ.100 கோடி வசூலை அள்ளிய "மிராய்"படத்தின்ஃபர்ஸ்ட் சிங்கிளானஊரும் பிளட் வீடியோவை படக்குழு கடந்த வாரம் வெளியிடப்பட்டது. இந்த பாடல் யூடியூபில் 15 மில்லியன் பார்வைகளை கடந்துள்ளது.இப்படம் தமிழ்,தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வெளியாக இருக்கிறது. திரைப்படம் வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அக்டோபர் 17 ஆம் தேதி வெளியாக இருக்கிறது.இந்நிலையில், ட்யூட் படம் குறித்து பிரதீப் ரங்கநாதன் அப்பேட் கொடுத்துள்ளார். இதுகுறித்து பிரதீப் ரங்கநாதன் அவரது எக்ஸ் தள பக்கத்தில்," இனிமே லவ் பண்ற பொண்ணு விட்டுட்டு போனா அவள பாத்து இந்த ரெண்டு வார்த்த சொல்லுங்க.. அந்த ரெண்டு வார்த்த என்ன என்றும்இதுதொடர்பாக இன்று மாலை 4.35 மணிக்கு 2வது சிங்கிள் அப்டேட் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# உலகளவில் ரூ.100 கோடி வசூலை அள்ளிய "மிராய்"




மிராய் திரைப்படம் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.2011 ஆம் ஆண்டு சாம்பி ரெட்டி படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகினார் தேஜா சஜ்ஜா . தெலுங்கு சினிமாவில் வளர்ந்து வரும் நடிகர்களுள் ஒருவர் இவர்.இப்படத்தில் மனோஜ் மஞ்சு வில்லனாகவும், ரித்திகா நாயக், தேஜா சஜ்ஜாவுக்கு ஜோடியாகவும் நடித்துள்ளனர்.

தேஜா சஜ்ஜாவின் அடுத்த படமாக மிராய் திரைப்படம் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இப்படத்தை ஒளிப்பதிவாளர் மற்றும் இயக்குனரான கார்த்திக் கட்டாமானேனி இயக்கியுள்ளார். பீபில் மீடியா ஃபேக்டரி நிறுவனம் மிராய் படத்தை தயாரித்துள்ளனர்.

படத்தின் இரண்டாம் நாள் வசூல் விவரத்தை படக்குழு அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது. அதன்படி திரைப்படம் 55.60 கோடி ரூபாய் வசூலித்தது.இந்நிலையில், மிராய் திரைப்படம் உலகளவில் ரூ.100 கோடியை வசூலித்துள்ளது.இதுகுறித்து, படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

# தனுஷ் இயக்கி நடிக்கும் இட்லி கடை படத்தின் 'என் பாட்டன் சாமி' பாடல் வெளியானது



வருகிற 1ந்தேதி இப்படம் வெளியாக உள்ளது.பாடலின் வீடியோவை ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாக்கி வருகின்றனர்.

தனுஷ் இயக்கத்தில் 4வது படமாக 'இட்லி கடை' உருவாகியுள்ளது. இது தனுஷ் நடிக்கும் 52வது திரைப்படமாகும். தனுஷ் இயக்கி நடிக்கும் இத்திரைப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார். இந்த படத்தினை டான் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. வருகிற 1ந்தேதி இப்படம் வெளியாக உள்ளது.

இப்படத்தில் நித்யா மேனன், ஷாலினி பாண்டே, அருண் விஜய், சத்யராஜ், ராஜ்கிரண் உள்ளிட்டோர் நடித்து உள்ளனர். இப்படத்தின் இசை வெளியீடு விழா சமீபத்தில் நடைபெற்றது.இந்த நிலையில், இப்படத்தின் 'என் பாட்டன் சாமி' பாடலின் லிரிக்கல் வீடியோ வெளியாகி உள்ளது. பாடலின் வீடியோவை ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாக்கி வருகின்றனர்.

# மகளிர் ஒருநாள் கிரிக்கெட்: பாகிஸ்தானை வீழ்த்தி அபார வெற்றி பெற்ற தென் ஆப்பிரிக்கா



தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி லாகூரில் நேற்று நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் அணி 50 ஓவரில் 4 விக்கெட்டை இழந்து 255 ரன்கள் எடுத்தது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக சித்ரா அமீன் 121 ரன்கள் எடுத்தார். தென் ஆப்பிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக அயபோங்கா காக்கா 2 விக்கெட் வீழ்த்தினார்.

தொடர்ந்து 256 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த தென் ஆப்பிரிக்க அணி 48.2 ஓவரில் 2 விக்கெட்டை மட்டும் இழந்து 259 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. தென் ஆப்பிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக மாரிசேன் காப் 120 ரன்கள் எடுத்தார்.இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 10 என தென் ஆப்பிரிக்கா முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 2வது ஒருநாள் போட்டி வரும் 19ம் தேதி நடக்கிறது.

# ஐ.சி.சி. தரவரிசைப் பட்டியல்; தமிழகத்தை சேர்ந்த வருண் சக்ரவர்த்தி முதல் இடம் பிடித்து அசத்தல்




சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) ஆடவருக்கான டி20 கிரிக்கெட் தரவரிசை பட்டியலை இன்று வெளியிட்டுள்ளது. அதன்படி டி20 பேட்ஸ்மேன்கள் பட்டியலில் இந்தியாவின் அபிஷேக் சர்மா (884 புள்ளி) முதல் இடத்தில் உள்ளார். இங்கிலாந்தின் பில் சால்ட் (838 புள்ளி), ஜாஸ் பட்லர் (794 புள்ளி) தலா 1 இடங்கள் முன்னேறி 2வது மற்றும் 3வது இடத்தில் உள்ளனர்.

இந்தியாவின்திலக்வர்மா(792புள்ளி) 2 இடங்கள்சரிந்து 4வது இடத்திற்கு வந்துள்ளார். பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இந்தியாவின் வருண் சக்ரவர்த்தி (733 புள்ளி) 3 இடங்கள் உயர்ந்து முதல் இடத்திற்கு வந்துள்ளார். நியூசிலாந்தின் ஜேக்கப் டபி (717 புள்ளி) ஒரு இடம் சரிந்து 2வது இடத்திற்கு வந்துள்ளார். வெஸ்ட் இண்டீசின் அஹேல் ஹொசைன் (707 புள்ளி) 3வது இடத்தில் உள்ளார்.

டி20 ஆல்ரவுண்டர்கள் தரவரிசை பட்டியலில் இந்தியாவின் ஹர்திக் பாண்ட்யா (237 புள்ளி) முதல் இடத்திலும், ஆப்கானிஸ்தானின் முகமதுநபி (213 புள்ளி) 2வது இடத்திலும் உள்ளனர். ஜிம்பாப்வேயின் சிக்கந்தர் ராசா (210 புள்ளி) ஒரு இடம் உயர்ந்து மூன்றாவது இடத்திற்கு வந்துள்ளார்.

## அடுத்த சுற்றுக்கு முன்னேறப்போவது யார்..? பாகிஸ்தான் யுஏஇ அணிகள் இன்று மோதல் அடுத்த சுற்றுக்கு முன்னேறப்போவது யார்..?

17வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி (20 ஓவர்) ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாய் மற்றும் அபுதாபியில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், ஓமன், ஐக்கிய அரபு அமீரக அணிகளும், 'பி' பிரிவில் இலங்கை, ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், ஹாங்காங் அணிகளும் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும், தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் இரு பிரிவிலும் 'டாப்2' இடங்களை பிடிக்கும் அணிகள் 'சூப்பர்4' சுற்றுக்கு முன்னேறும். இந்த தொடரில் இதுவரை 9 லீக் ஆட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இந்த ஆட்டங்களின் முடிவில் இந்திய அணி மட்டும் சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறி உள்ளது.

ஹாங்காங், ஓமன் அணிகள் தொடரில் இருந்து வெளியேறிவிட்டன. இந்நிலையில், இந்த தொடரில் இன்று நடைபெறும் 10வது லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் யுஏஇ அணிகள் மோதுகின்றன. இரு அணிகளும் இதுவரை இரு ஆட்டத்தில் ஆடி ஒரு வெற்றி, ஒரு தோல்வி கண்டுள்ளன.

இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறும். இதன் காரணமாக இந்த போட்டியில் வெற்றி பெற இரு அணிகளும் கடுமையாக போராடும். இதனால் ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காது. இந்திய நேரப்படி ஆட்டம் இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

DHINA KANI
CANARA BANK
ACCOUNT: 120028528266
IFSC CODE: CNRB0001041

PRINTED BY KANIRAJA V. PUBLISHED BY KANIRAJA V. ON BEHALF OF NAMADHU DHINA KANI TAMIL DAILY AND PRINTED AT SEAMAN GRAPHICS NO. 7/253, KVN PURAM 2 2ND STREET, KILPAUKGARDEN, CHENNAI 600010. AND PUBLISHED AT NO.28, THALIKATTIPALAYAM, KAITHAMALAI ROAD, UTTUKULI, TIRUPPUR - 638751. EDITOR: KANI RAJA V.